**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 9.5.2013**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு ஏனையோருக்கு இணையான கல்வி மற்றும் வாழ்வாதாரங்கள் பெற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் அறியாமையை நீக்குவதிலும், அவர்களின் கல்வி அறிவை வளர்ப்பதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர தேவையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மாநில அரசால் செயல்படுத்தப்படும் மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம், விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப் பணி பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, அனைத்து திட்டங்களுக்கும் தற்போது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ஒரு லட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்பு இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக 30,000 மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

தற்போது முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ள கல்லூரியில் தங்கி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு தலா 18,000 ரூபாயும், விடுதியில் தங்கி பயிலாத மாணாக்கர்களுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள ஆதி திராவிட மாணவ – மாணவியருக்கு இந்தத் தொகை போதாது என்பதைக் கருத்தில் கொண்டு, முழு நேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் 700 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியருக்கு ஆண்டுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்பொழுது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,300 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் கல்வி கற்பதற்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இடை நிற்றல் கணிசமாக குறைந்துள்ளது. இருப்பினும், அதிக அளவு மாணாக்கர்கள் சேர்க்கையின் காரணமாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் உள்ள இட வசதி, குளியல் அறை வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் 52 ஆதி திராவிட நல விடுதிகள், 2 பழங்குடியின நல விடுதிகள் என மொத்தம் 54 விடுதிகளுக்கு 52 கோடி ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு முதன்மைத் தேர்வில் Main Exam-ல் சிறப்பாக செயல்பட அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக 50,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் தொகுதி I, அதாவது Group I முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு, அவர்கள் முதன்மைத் தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில், சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக தலா 50,000/– ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளும் வகையில் இவ்வாறு உதவித் தொகை வழங்கும் இத்திட்டம் முதன் முறையாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அறிமுகப் படுத்தப்படுகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகள் சுயமாக தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தோராயமாக 250 பயனாளிகள் பயன் அடைகின்றனர். இதே போன்று, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த பட்டயக் கணக்கர்கள் அதாவது Chartered Accountants, செலவுக் கணக்கர்கள், அதாவது Cost and Works Accountants தேர்ச்சி பெற்ற பின், அவர்கள் சுயமாக தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், தோராயமாக 100 பயனாளிகள் பயன் அடைவர்.

மாணாக்கர்களுக்கு கணினி வழியாக கல்வி கற்பித்து அவர்களின் புரிதல் திறனை மேம்படுத்தும் வகையில் Smart Class Room என்னும் புதிய தொழில் நுட்பம் நடப்பாண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையின் கீழ் இயங்கும் 100 மேல் நிலைப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென 5 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சமுதாய மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மேம்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******